**தமிழ் இருக்கை**
**தமிழ் அறிவுப் போட்டி**

**<u>வினா - விடை</u>**

1. தமிழ்மொழியில் எத்தனை உயிர் எழுத்துகள் உள்ளன?
12
2. தமிழ் மொழியில் எத்தனை மெய் எழுத்துகள் உள்ளன?
18
3. தமிழ் மொழியில் எத்தனை முதல் எழுத்துகள் உள்ளன?
30
4. தமிழ் மொழியில் உள்ள மொத்த எழுத்துகள் எத்தனை?
247
5. கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் மரபுத் திங்கள் எப்பொழுது சட்டமாக்கப்பட்டது?
2016
6. ஏறத்தாழ உலகில் வாழும் தமிழர் தொகை எவ்வளவு?
80 மில்லியன்
7. தமிழரது தொல்வாழ்விடங்கள் எவை?
ஈழம், தமிழகம்
8. எந்த நாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது?
இலங்கை, சிங்கப்பூர்
9. எந்த நாட்டு நாணயங்களில் தமிழ் மொழி இடம்பெற்றுள்ளது?
இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மொரிசியசு
10. திருக்குறளை இலத்தீன் மொழியில் முதலில் மொழிபெயர்த்த அறிஞர் யார்?
அருட்தந்தை யோசேப் பெஸ்கி (வீரமாமுனிவர்)
11. முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு எங்கு நடைபெற்றது?
கோலாலம்பூர், மலேசியா
12. முதல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஒழுங்கு செய்தவர் யார்?
அருட்தந்தை சேவியர் தனிநாயகம் அடிகள்
13. முதலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு எப்பொழுது நடைபெற்றது?
1966
14. எத்தனையாவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது?
நான்காவது
15. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் விரிவுரையாளர் யார்?
சுவாமி விபுலானந்தர்
16. 'நோபல்' பரிசு பெற்ற முதற் தமிழர் யார்?
சி.வி.இராமன்
17. கணிதமேதை எனப்போற்றப்படும் தமிழர் யார்?
இராமனுசன்

18. திருவள்ளுவரது 133அடி உயர உருவச்சிலை நிறுவப்பட்ட இடம் எது?
கன்னியாகுமரி
19. மட்டக்களப்பை வாழ்விடமாகக் கொண்ட புகழ்பூத்த தமிழறிஞர் யார்?
சுவாமி விபுலானந்தர் அடிகள்
20. பன்னிரண்டு ஆண்டுகள் ஆய்வுசெய்து விபுலானந்தர் எழுதிய தமிழ் நூல் எது?
யாழ்நூல்
21. தமிழிலிருந்து இறுதியாகப் பிரிந்து உருவாகிய மொழி எது?
மலையாளம்
22. இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழ் மன்னன் யார்?
எல்லாளன்
23. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் யார்?
இரண்டாம் சங்கிலியன்
24. வன்னிப் பகுதியை ஆண்ட கடைசி குறுநில மன்னன் யார்?
பண்டார வன்னியன்
25. எல்லாளன் எந்த நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்?
அனுராதபுரம்
26. கூகிள் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலராகப் பணியாற்றும் தமிழர் யார்?
சுந்தர் பிச்சை
27. சதுரங்க விளையாட்டுப் போட்டியில் புகழ்பெற்ற தமிழர் யார்?
விஸ்வநாதன் ஆனந்த்
28. எந்த நகரத்தை ”மீன் பாடும் தேனாடு” என்று அழைக்கின்றார்கள்?
மட்டக்களப்பு
29. ஈழத்தில் ”கற்பகதரு” என்று அழைக்கப்படும் பயன்தரும் மரம் எது?
பனை
30. தமிழரின் முதன்மையான உணவு எது?
அரிசி
31. தமிழர் கதிரவனுக்கு நன்றி கூறும் நாள் எது?
தை முதல் நாள் (பொங்கல்)
32. தமிழில் உள்ள முதன்மையான நீதி நூல் எது?
திருக்குறள்
33. மூன்றாவது சங்கம் எங்கு அமைந்திருந்தது?
மதுரை
34. மூவேந்தர்களில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த மன்னர்கள் யார்?
பாண்டிய மன்னர்கள்
35. குளக்கோட்டனால் கட்டப்பட்ட குளங்களில் முதன்மையானது எது?
கந்தளாய்க் குளம்
36. முதலாவது இராசராச சோழனால் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோவில் எது?
தஞ்சைப் பெருவுடையார் கோவில்

37. திருக்குறளை எழுதியவர் யார்?
திருவள்ளுவர்
38. கொன்றை வேந்தனை எழுதியவர் யார்?
ஔவையார்
39. தமிழ்நாட்டின் தலைநகர் எது?
சென்னை
40. இடைக்கால சோழ அரசின் தலைநகராக விளங்கிய நகர் எது?
தஞ்சை
41. சேர அரசின் தலைநகராக விளங்கிய நகர் எது?
வஞ்சி
42. பாண்டிய அரசின் தலைநகராக விளங்கிய நகர் எது?
மதுரை
43. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எங்கே அமைந்துள்ளது?
தரமணி (சென்னை)
44. புரட்சிக் கவி என்று அழைக்கப்படுபவர் யார்?
பாரதிதாசன்
45. தமிழில் முதலில் வெளிவந்த திரைப்படம் எது?
காளிதாஸ்
46. முத்தமிழ் எவை?
இயல், இசை, நாடகம்
47. இன்று எம்மிடமுள்ள மிகப்பழைய இலக்கண நூல் எது?
தொல்காப்பியம்
48. கந்தளாயில் அமைந்திருந்த மிகப்பெரிய தொழிற்சாலை எது?
சீனித் தொழிற்சாலை
49. வாழைச்சேனையில் அமைந்திருந்த மிகப்பெரிய தொழிற்சாலை எது?
காகிதத் தொழிற்சாலை
50. திருகோணமலையில்வெந்நீர் ஊற்றுகளைக் கொண்ட இடம் எது?
கன்னியா
51. கூடுதலாக மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல் எது?
திருக்குறள்
52. பத்தாவது தமிழாராய்ச்சி மாநாடு நடந்த இடம் எது?
சிக்காகோ
53. முல்லைக்குத் தேர்கொடுத்த மன்னன் யார்?
பாரி
54. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னன் யார்?
அதியமான்
55. கனடாவில் தமிழ் இருக்கை அமையவுள்ள பல்கலைக் கழகம் எது?
ரொறன்ரோ பல்கலைக்கழகம்
56. தமிழில் நீதி நூல்கள் அதிகம் எழுதிய புலவர் யார்?

ஔவையார்

57. இலங்கைப் படையினரால் ஆகக் கூடுதலாக தமிழ் மக்கள் கொல்லப்பட்ட ஆண்டு எது?

2009

58. வைகைக்கரையருகே புதையுண்டு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய நகரம் எது?

கீழடி

59. முதலாவது இராசராச சோழனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கல்கியின் நாவல் எது?

பொன்னியின் செல்வன்

60. அகத்தியர் இருந்து தமிழ் வளர்த்த மலைக்கு என்ன பெயர்?

பொதிகை மலை

61. திருக்கோணேஸ்வரத்தைக் கட்டிய மன்னன் யார்?

குளக்கோட்டன்

62. தமிழில் வசன நடையை அறிமுகப்படுத்தியவர் யார்?

வீரமா முனிவர்

63. கடலில் மூழ்கியதாகச் சொல்லப்படும் தமிழர் வாழிடம் எது?

குமரிக்கண்டம்

64. சோழ அரசர்களின் கொடி எது?

புலி

65. பாண்டிய அரசர்களின் கொடி எது?

மீன்

66. சேர அரசர்களின் கொடி எது?

வில், அம்பு

67. யாழ்ப்பாண அரசின் கொடி எது?

நந்தி

68. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் “Black Gold” என அழைக்கப்பட்ட உணவுப் பொருள் எது?

மிளகு

69. நாலடியாரில் எத்தனை பாடல்கள் உள்ளன?

400

70. திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

1330

71. ஆழ்வார்கள் எத்தனை பேர்?

12

72. பெரியபுராணத்தில் இடம்பெறாத சைவ சமயக் குரவர் யார்?

மாணிக்கவாசகர்

73. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கூறியவர் யார்?

கணியன் பூங்குன்றனார்

74. கனடாவில் தமிழர் தெருவிழா எந்த அமைப்பால் கொண்டாடப்பட்டு வரப்படுகின்றது?
கனடியத் தமிழர் பேரவை
75. தெற்கேசியாவைத் தாண்டிய முதல் தமிழ் இருக்கை எப் பல்கலைக்கழகத்தில் உருவாகுகின்றது?
ஹார்வார்ட் பல்கலைக்கழகம்
76. ரொறன்ரோப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைப் பாடலுக்கு இசை அமைத்தவர் யார்?
டி இமான்
77. பாஞ்சாலி சபதம் எழுதியவர் யார்?
மகாகவி பாரதியார்
78. மூவேந்தரையும் ஒரே போர்முனையில் தோற்கடித்த குறுநில மன்னன் யார்?
பாரி
79. குறிஞ்சிப்பாட்டில் எத்தனை மலர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன?
99
80. இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து கண்ணகிக்கு சிலை அமைத்த மன்னன் யார்?
சேரன் செங்குட்டுவன்
81. எந்நாட்டு வானூர்தித்தளங்களில் தமிழிலும் அறிவித்தல் வழங்கப் பெறுகின்றது?
இந்தியா, இலங்கை, சிங்கப்பூர்
82. திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஐரோப்பிய அறிஞர் யார்?
அருட்தந்தை ஜி யு போப்
83. எங்கு நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றிய பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்?
யாழ்ப்பாணம்
84. தமிழீழப் பகுதியில் அமைந்துள்ள மிகப்பெரிய குளம் எது?
இரணைமடுக் குளம்
85. யாழ்ப்பாண அரசை முதலில் கைப்பற்றிய ஐரோப்பியர் யார்?
போர்த்துகேயர்
86. தனியாக இருந்த தமிழர் பிரதேசத்தை சிங்களப் பிரதேசத்தோடு இணைத்தவர்கள் யார்?
பிரித்தானியர்
87. தமிழ் மாகாணங்கள் சிங்கள மாகாணங்களோடு எப்பொழுது இணைக்கப்பட்டது?
1833
88. தமிழ் மாகாணங்களை சிங்கள மாகாணங்களோடு இணைப்பதற்கான பரிந்துரை செய்த ஆணைக்குழு எது?
கோல்புரூக்-கமரோன் ஆணைக்குழு
89. தமிழைத் தமிழருக்கும் அப்பால் கொண்டுசென்றவர்களுள் முதன்மையானவர்?
அருட்தந்தை சேவியர் தனிநாயகம் அடிகளார்
90. நவீன தமிழ் நாடகத் தந்தை என்ற பெயருடன் வழங்கப்படுபவர்?

பம்பல் சம்பந்த முதலியார்
91. சாதாரண மக்களை முதன்மையாக கொண்டு ஆக்கப்பட்ட முதலாவது காப்பியம் எது?
சிலப்பதிகாரம்
92. யாழ்ப்பாணத்துக்கு அண்மையாக உள்ள மிகப்பெரிய தீவு எது?
நெடுந்தீவு
93. ஈழத்தின் வடக்கில் உள்ள பறவைகள் சரணாலயம் உள்ள இடம் எது?
சுண்டிக்குளம்
94. மொட்டைக்கறுப்பன் என்னும் நெல் விளையும் இடம் எது?
பூநகரி
95. முல்லைத்தீவில் அமைந்திருக்கும் கடல் எது?
நந்திக்கடல்
96. ஈழத்துச் சிதம்பரம் எங்குள்ளது?
காரைநகர்
97. கண்டிவீதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆனால் மிகச்சிறிய பிள்ளையார் கோவில் எது?
முறிகண்டி
98. இல்மினைட் என்ற கனிமப்பொருள் அதிகம் விளையும் இடம் எது?
புல்மோட்டை - திருகோணமலை
99. கனடாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் யார்?
இராதிகா சிற்சபைஈசன்
100. கண்டியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன்
101. யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியைத் தூக்கிலிட்ட ஐரோப்பியர் யார்?
போர்த்துகேயர்
102. கதிர்காமத்தில் அமைந்திருக்கும் கங்கை எது?
மாணிக்க கங்கை
103. வல்வெட்டித்துறையில் கட்டப்பட்டு அமெரிக்கா வரை பயணம் செய்த பாய்மரக்கப்பலின் பெயர் என்ன?
அன்னபூரணி
104. மாமல்லபுரம் கற்கோயில்களை உருவாக்கிய பல்லவ மன்னர் யார்?
நரசிம்ம பல்லவன்
105. சிகிரியா குன்றின் மேல் கோட்டை கட்டிய மன்னன் யார்?
காசியப்பன்
106. ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் உள்ள கடலுக்கு என்ன பெயர்?
பாக்கு நீரிணை
107. தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலை இயற்றியவர் யார்?
மனோன்மணீயம் சுந்தரனார்
108. தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?

மறைமலை அடிகள்

109. ஈழத்து காந்தி என்று அறியப்பட்டவர் யார்?

தந்தை செல்வா (S.J.V செல்வநாயகம்)

110. மகாகவி என்ற அடைமொழியைக் கொண்ட ஈழத்துக் கவிஞர் யார்?

து உருத்திரமூர்த்தி

111. ”என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு” என்று பாடியவர் யார்?

திருமூலர்

112. திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர் யார்?

சேக்கிழார்

113. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

நம்பியாண்டார் நம்பி

114. யாருடைய ஆட்சியின் கீழ் திருமுறைகள் தொகுக்கப்பட்டன?

முதலாவது இராஜ இராஜ சோழன்

115. நன்னூல் என்ற இலக்கண நூலை எழுதியவர் யார்?

பவணந்தி முனிவர்

116. அமெரிக்காவுக்கு முதன்முதலில் இந்திய பண்பாட்டுத் தூதராக சென்றவர் யார்?

சிவாஜி கணேசன்

117. “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று பாடியவர் யார்?

இராமலிங்கம் அடிகள்

118. கவிஞர் கண்ணதாசன் எழுதிய முதல் சிறுகதை நூல் எது?

ஈழத்துராணி

119. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேலாளர் யார்?

சிவன் கைலாசவடிவு

120. தமிழ்மொழி வடமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் என்று ஆராய்ச்சி மூலம் முதன்முதலில் நிறுவியவர் யார்?

அருட்தந்தை இராபர்ட் கால்ட்வெல்